கல்வி அமைச்சு

# இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் *I* உத்தியோகத்தர்களை பதவிகளுக்கு நியமித்தல் -*2024*

*1925/37* மற்றும் *2015.07.28*ம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அச் சேவைப் பிரமாணக் குறிப்பில் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கல்வி அமைச்சின் கீழ் உள்ள குளியாப்பிட்டிய தேசிய கல்வியியல் கல்லூரியின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் *I* உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக, அதற்குரிய தகைமைகளுடன் கூடிய உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் உத்தரவு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல் ஆணையாளரின் இலக்கம். EDR/PRE/2024/D-297 மற்றும் *2024.08.09*ம் திகதியுடைய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதியின் பிரகாரம் விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலில் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "உதவிச் செயலாளர், ஆசிரியர் கல்வியியலாளர் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கி கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை தரம் *I* உத்தியோகத்தர்களை பதவிக்கு நியமித்தல்" என்பதாக தெளிவாக குறிப்பிடவும்.

.

I. **பதவிகள்:**

| தொடர் இலக்கம் | தேசிய கல்வியியல் கல்லூரி | பீடாதிபதி பதவிகள் | உப பீடாதிபதி பதவிகள். |
|---|---|---|---|
| | | சிங்களம் | சிங்களம் |
| 1 | குளியாப்பிட்டிய தேசிய கல்வியியல் கல்லூரி | 01 | 03 |

II. விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி - ***2024.09.06***

III. பதிவுத் தபாலில் அனுப்ப முன்னர் பூரணப்படுத்திய தங்களது விண்ணப்பப் படிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்றை *(Scan Copy)* கீழ்வருமாறு மின்னஞ்சல் மூலமாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
E- Mail = moesltes.branch@gmail.com
Subject = Appointment of the Officers in Grade I of the Sri Lanka Teacher Educators' Service to the Posts – 2024 (Name & ID No)

**02. தெரிவு செய்யும் முறை:**

I. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் *1925/37* மற்றும் *28.07.2015* திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை பிரமாணக் குறிப்பின் *11*ம் பந்திக்கமைய மேற்குறித்த பதவிகளுக்காக தகைமையுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில்

விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில், விண்ணப்பதாரர்களின் விருப்பு மற்றும் சேவையின் தேவையின் அடிப்படையில் கல்விச் செயலாளரின் பரிந்துரையையும் கருத்தில் கொண்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

II. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் உப ஆவணம் *V* இன் படி, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் குறைந்த பட்சம் 35 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்கள் மாத்திரமே உரிய பதவிகளுக்கு நியமிப்பதற்காக தெரிவு செய்யப்படுவர்.

III. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு புள்ளி வழங்கும் முறை இந்த அறிவிப்பின் உப ஆவணம் *I* இல் தரப்பட்டுள்ளது.

IV. விண்ணப்பிக்க விரும்பும் சேவை நிலையங்கள் மற்றும் பதவிகளை எதிர்ப்பார்ப்பு தொடரொழுங்குக்கு அமைய விண்ணப்பப் படிவத்தின் இலக்கம் 08 இன் கீழ் குறிப்பிடுதல் வேண்டும். திறமை அடிப்படையில் தாங்கள் விண்ணப்பித்த பதவியொன்றிற்கு தாங்கள் தகுதி பெறவில்லை எனின், சேவையின் தேவைகள் அடிப்படையில் பிறிதொரு சேவை நிலையமொன்றில் பதவிக்கு தங்களை நியமித்தல் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படலாம்.

V. நியமனம் செய்யப்பட்ட பதவியொன்றில் கடமைகளைப் பொறுப்பேற்பதை நிராகரிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்பதால் நியமனம் பெற்ற பதவியில் கட்டாயமாக கடமைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

VI. விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பு மற்றும் தொடரொழுங்குவரிசையில் பின்னராக மாற்றம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

VII. இந்த நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் திறமைகளுக்கு அமைய பதவிகளை வழங்குவதற்காக கருத்தில் கொள்ளப்படுவது இக் கட்டத்தின் போது மாத்திரமே ஆகும்.

VIII. குளியாப்பிட்டிய தேசிய கல்வியியல் கல்லூரியின் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்கள் மாத்திரம் இந்த அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் இதற்கு முன்னராக 2024 ஜூன் மாதம் 24ம் திகதியன்று அமைச்சின் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் படி ஏற்கனவே விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்துள்ள உத்தியோகத்தர்கள், இதன் கீழ் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்க முன்னர் விண்ணப்பப் படிவத்தின் இலக்கம் 08இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்பார்க்கும் சேவை நிலையங்கள் மற்றும் பதவிகள் தொடர்பான விபரங்கள் சகிதம் இவ் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

IX. விண்ணப்பதாரர் ஒருவருக்கு தகைமைகள் இல்லை என்பதாக வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் அல்லது முன்னிலைப்படுத்தியுள்ள ஏதேனும் ஒரு விடயம் போலியானது என்பதாக பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் அல்லது ஏதேனும் ஒரு தவறான விடயத்தினை வேண்டுமென்றே மறைத்திருப்பின் பதவியிலிருந்து நீக்கப்படலாம்.

**03. தகைமைகள்:**

I. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 03 வினைத்திறன்காண் தடை தாண்டலில் சித்தியடைந்த தரம் *I* உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

II. இவ் விண்ணப்பப் படிவங்களைக் கோருவதற்குரிய அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திற்கு முந்தைய 5 வருட காலப் பகுதியினுள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

III. சகல தகைமைகளையும் விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தியிருத்தல்.

**04.** உரிய கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைகள் பத்தரமுல்ல, இசுருபாய, கல்வி அமைச்சில் நடைபெறும். இந்த நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் திகதின் பின்னராக அறிவிக்கப்படும். இப் பதவிகளுக்கு நியமித்தல் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**05.** சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை காணப்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானது எனக் கருத்தில் கொள்ளப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் உத்தரவின் படி,

*2024 ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி*

ஜே. எம் திலகா ஜயசுந்தர
செயலாளர்



1